மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி,
**முன்னிலை : திரு.க.யோகேஷ்வரன்,** B.A., L.L.B,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
காரியாபட்டி.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.14/2026**
IN
**அசல் வழக்கு எண். 52/2024**

இருளாயி ... மனுதாரர் / 2ம் பிரதிவாதி

/எதிர்/

க.சுந்தரலிங்கம் ...... எதிர்மனுதாரர் /வாதி

இம்மனுவானது 04.02.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 23.02.2026 வந்தபோது, மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கவியரசன் அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியன் அவர்களும் முன்னிலையாகி செய்து கொண்ட இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆர்டர் 6 ரூல் 17,18 மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கின் எதிர்வழக்குரையை மனுவில் கண்ட விபரப்படி சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வேண்டி மனு தாக்கல்.

**2.மனுதாரர் /2ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் /2ம்பிரதிவாதி தரப்பில், தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 6ம்பத்தியில் 5வது வரியில் ஆவண எண். 367/2004

என்பதற்கு பதிலாக தவறுதலாக ஆவண எண். 368/2004 என்று தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. இது வேண்டுமென்று ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமானதாகும். எனவே, மேற்படி எதிர்வழக்குரையை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்/வாதி மறுப்புரையின் சுருக்கம்:–**

எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், மனுதாரர் வேண்டுமென்ற ஆவண எண்ணை தவறுதலாக குறிப்பிட்டுவிட்டு தற்போது வழக்கின் விசாரணையை இழுதடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர் /2ம்பிரதிவாதியின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

**4. தீர்வு காணவேண்டிய பிரச்சனை:–**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**5. தீர்வு முடிவு:–**

5(1).இம்மனு, எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). மனுதாரர் /2ம்பிரதிவாதி தரப்பில், தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 6ம்பத்தியில் 5வது வரியில் ஆவண எண். 367/2004 என்பதற்கு பதிலாக தவறுதலாக ஆவண எண். 368/2004 என்று தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது என வாதம் முன் வைத்துள்ளார்.

5(3). எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், மனுதாரர் வேண்டுமென்ற ஆவண எண்ணை தவறுதலாக குறிப்பிட்டுவிட்டு தற்போது வழக்கின் விசாரணையை இழுதடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது எதிர்மனுதாரரின் வாதமாகும்.

5(4). அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தாவா சொத்து குறித்து விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக் கட்டளை

பரிகாரம் கோரியுள்ள நிலையில், மனுதாரர் /2 ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ஆவண எண். 367/2004 என்பதற்குப் பதிலாக ஆவண எண். 368/2004 என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். மேலும் இந்த வழக்கில் (Trail) விசாரணை இன்னும் தொடங்கபடவில்லை. மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் **In LIC Vs Sanjeev Builders** முன்தீர்ப்பினை பரிசீலிக்கையில் " *In dealing with a prayer for amendment of pleadings, the court should avoid a hypertechnical approach, and is ordinarily required to be liberal especially where the opposite party can be compensated by costs"*

இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது. அதனடிப்படையில் மனுதாரர் மனுவில் கூறியுள்ள சீர்திருத்த விபரங்கள் அசல் வழக்கின் எதிர்வழக்குரையை சீர்திருந்தம் செய்து கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது. மேற்படி தவறானது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டதால் ஏற்பட்டது என்றும், வேண்டுமென்று ஏற்பட்டதல்ல என்று கூறியுள்ளதை கருத்திற்கொண்டும், மேலும் வழக்குகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான விதி. அந்த விதிக்கிணங்க மனுதாரர்/2 ம்பிரதிவாதி தரப்பு ஆதாரங்களை முன்னிறுத்த மனுதாரர்/2 ம் பிரதிவாதிக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித அநீதி ஏதும் விளைவிக்கப்படமாட்டாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும், மனுதாரர் /2 ம்பிரதிவாதி ரூ.500/-ஐ எதிர்மனுதாரர்/ வாதிக்கு செலவுத் தொகையாக 9.03.2026 ம் தேதி தேதிக்குள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுவில் கூறப்பட்டவாறு அசல் வழக்கின் எதிர்வழக்குரையை திருத்தம் மேற்கொள்ள மனுதாரர்/2 ம் பிரதிவாதிக்கு அனுமதி வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

<u>6. இறுதிமுடிவு:-</u>

முடிவாக, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. இருப்பினும்,

மனுதாரர் /2ம்பிரதிவாதி ரூ.500/-ஐ எதிர்மனுதாரர்/ வாதிக்கு செலவுத் தொகையாக 9.03.2026ம் தேதி தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

-------------------

மாவட்ட உரிமையியல்
மற்றும் நீதித்துறை நடுவர்
நீதிமன்றம்,காரியாபட்டி.
இ.ம.எண்.14/2026
இன்
அ.வ.எண்.52/2024.
சீரான/வரைவு-உத்தரவு
நாள்: 02.03.2026.

---------------------